[2018 மே 30

2. ஜனநாயக முறையில் பேரவையை நடத்துவதாக பேரவைத் தலைவருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்ட மன்றப் பேரவையில் மாண்புமிகு பேரவைத் தலைவராக தங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் முன்மொழிந்து, அம்மா அவர்களின் நல்லாசியோடு சிறப்பான முறையில் பேரவைத் தலைவர் என்கின்ற அந்த மாண்பினை நீங்கள் என்றும் காப்பாற்றி வருகின்றீர்கள்.*

நேற்றையதினம்கூட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலை குறித்து நல்ல பல விளக்கங்களை அளித்தார்கள். அதிலும் குறிப்பாக, மக்கள் விரும்பாத எந்தவொரு செயலையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதுதான் இந்த அரசின் நிலைப்பாடு என்பதையும் சுட்டிக்காட்டினார். அதே நேரத்தில், ஸ்டெர்லைட் ஆலை குறித்துப் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவர்கள் அந்த ஆலையைத் திறப்பதற்கும், அந்த ஆலையை நடத்துவதற்கும் என்னென்ன அனுமதிகளையெல்லாம் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் புள்ளிவிவரங்களோடு பட்டியலிட்டுக் காண்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தபோது முன்னாள் அமைச்சர் ராஜா அவர்கள் கொடுத்த அந்த ஆணைகள், அதுபோன்று தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்களாக இருந்த திரு. மைதீன்கான், திரு. என்.கே.கே. பெரியசாமி ஆகியோர் கொடுத்த அந்த அனுமதிகளையெல்லாம்கூட சுட்டிக்காட்டினார். மேலும், அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது, அந்த ஆலை நடத்தப்படவேண்டுமென்று தி.மு.க. சார்பிலே அவர்கள் அழுத்தந்திருத்தமாக வாதிட்டதையெல்லாம்கூட ஆணித்தரமாக எடுத்துக்காட்டி, தோலுரித்துக் காட்டி, உள்ளபடியே தமிழ்நாட்டு மக்களுக்கும், தூத்துக்குடி மக்களுக்கும் துரோகம் செய்தது (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கும் நிலையிலே, விசாரணை நடத்தி அறிக்கையிலே என்ன பரிந்துரைகள் தரப்படுகின்றனவோ, அவற்றையெல்லாம், முழுமையாக அரசு தனது கவனத்திலே கொண்டு, தவறு யார் செய்தாலும், நிச்சயமாக நடவடிக்கை உண்டு என்கின்ற வகையில்கூட அந்தக் கருத்தைச் சொன்னார்கள். உண்மை நிலை இப்படியிருக்க, அதிலும் குறிப்பாக, ஆலையின் இரண்டாவது கட்ட விரிவாக்கத்திற்கு, அன்றைக்குத் தொழில் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 230 ஏக்கர் நிலம் வழங்கும் அந்த அனுமதியும் கொடுக்கப்பட்டது. அப்படி அனுமதி கொடுக்கப்பட்டதைக்கூட இரத்து செய்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், ஸ்டெர்லைட் விவகாரத்தில் முழுமையான அளவிற்கு அவர்களுடைய துரோகத்தைத் தோலுரித்துக் காட்டிவிட்ட நிலையில், எங்கே தமிழ்நாட்டு மக்கள் முழுமையான அளவில் தங்களைப் புறக்கணித்துவிட்டு ஓரங்கட்டிவிடுவார்களோ என்கின்ற ஒரு பயம், ஓர் அச்சம்... (குறுக்கீடு) ஆலைக்கு வழங்கப்பட்ட நிலத்தை இரத்து செய்தாகிவிட்டது எனச் சொல்லிவிட்டேன். அது தவிர, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பு என்கின்றபோது, ஏறக்குறைய 22 ஆண்டுகால சட்டப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் வழியிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி மேலாண்மை ஆணையம், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, காவேரி நீர் முறைப்படுத்தும் குழு (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய இரண்டையும் பெற்றதையும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை; தூக்கம் இல்லை; உறக்கம் இல்லை; பசி இல்லை. எனவே, ஓடுகிறார், ஓடுகிறார், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடுகின்றார். அந்தளவிற்கு நிம்மதி இல்லாமல், அமைதியில்லாமல் எப்படியாவது அம்மா அவர்களுடைய அரசைக் கவிழ்த்துவிட வேண்டும் என்கின்ற ஒரு நினைப்போடு செயல்படுகின்றார்கள். ஆரம்ப காலத்திலிருந்து சதிகள் பின்னப்பட்டாலும், அந்தச் சதிகளையெல்லாம் தூள், தூளாக்கிய ஒரு சிறப்பு நமது அரசுக்கு இருக்கிறது. அம்மா அவர்களுடைய நல்லாசி நமக்கு என்றைக்குமே உண்டு (மேசையைத் தட்டும் ஒலி)

என்கின்ற நிலையில், அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்கி, அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு வெற்றி நடைபோட்டு வருகின்றது.

குறிப்பாக, 22 ஆண்டுக்கால போராட்டத்தின் வெற்றி மக்களைச் சென்றடையக் கூடாது என்கின்ற வகையில் நேற்றையதினம் இவ்வளவு விளக்கங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்த பிறகும், அவர்கள் சட்டமன்றத்தைப் புறக்கணித்திருப்பது, அதிலும் குறிப்பாக, "சட்டமன்றத்தில் மாண்பு இல்லை" என்று சொல்வது, 'சாத்தான் வேதம் ஓதுவது போல' உள்ளது. அதைப்பற்றி, இவர்கள் சொல்லலாமா? கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கவேண்டும். 2006 ஆம் ஆண்டில் 26-5-2006 அன்று அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாகிய, நாங்களெல்லாம் வருகை தந்தபோது, எங்களையெல்லாம் பேச விடாமல் அப்படியே குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே போட்டு, ஜனநாயகத்தை ** செய்த ஓர் அரசு தி.மு.க-வுடைய அரசு. அன்றைக்கு தி.மு.க. ஆட்சியில் **

முற்பகல் 11-15

அன்றைக்கு நாங்கள் அனைவரும் தற்காலிகமாக வெளியேற்றப்பட்ட நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னந்தனியாக வந்தார்கள். சிங்கம் எப்போதும் single-ஆகத்தான் வரும். வந்தார்கள்; வென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கூட்டத்திற்கு வந்தபோதே, அவர்கள் 27-5-2006 அன்று 40 நிமிடங்கள் பேசினார்கள். அவர் பேசிய 40 நிமிடங்களில் ஏறக்குறைய 37 முறை குறுக்கீடுகள் இருந்தன; 37 முறை குறுக்கீடுகள் இருந்தன. அதன் பின்னர், திருத்திய வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நடைபெற்றபோது, 31-7-2006 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதத்தில் பங்குகொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசியபோது, அன்றைய முதலமைச்சர், அமைச்சர்கள் என அனைவருமே சேர்ந்துகொண்டு, அன்றைக்கு அவரைப் பேச விடாமல், 67 முறை குறுக்கீடு செய்தனர். மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்கு சட்டப் பேரவைத் தலைவரிடத்தில் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டது மட்டும் 25 முறை. அன்றைக்கு 25 முறை பேசுவதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அனுமதி கேட்டிருக்கிறார்கள். நம்முடைய பத்திரிகையாளர்கள் இங்கே இருக்கின்றார்கள். தற்போது நடக்கின்ற நிகழ்வுகளை தமிழக மக்களும் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். எந்த அளவிற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உட்கார்ந்திருக்கும் ஆசனம் முக்கியத்துவம் பெற்றது என்று. அந்த ஆசனம் 1921 ஆம் ஆண்டு லார்டு வில்லிங்டன் பிரபு அவர்களால் வழங்கப்பட்டது. அந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், கருத்து மாச்சர்யம் இல்லாமல், எந்தவித கருத்து வேறுபாடும் இல்லாமல், 'சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் சமம்' என்ற அடிப்படையில் அனைவருக்கும் சமமாக வாய்ப்பு வழங்கி, ஜனநாயக மாண்பினை, ஜனநாயகப் பண்பினை கட்டிக் காத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகைத் துறையைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே இருக்கின்றனர். 2006 ஆம் ஆண்டு எங்களுடன் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த பலர் இங்கே இருக்கிறார்கள். அப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவராக இருந்தவர் ** எந்த அளவிற்கு அன்றைக்கு சட்டமன்ற ஜனநாயக மரபுகளைக் குழி தோண்டிப் புதைத்து, காலால் மிதித்து, சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் 'வாடா, போடா' என்று ஒருமையில் பேசி, அந்த இடத்தில் இருந்துகொண்டு கையைக் காட்டி 'உட்காருகிறாயா? இல்லையா? உட்கார்' என்று சொன்னவற்றையெல்லாம் நாட்டு மக்கள் நிச்சயமாக மறந்துவிட மாட்டார்கள்.

அமைதியாக, சாந்த சொரூபியாக இருப்பவர் எங்களுடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் நம்பிக்கை கோரும் தீர்மானம் வந்தபோது, அன்றைக்கு ஒரு கூத்தை, நாடகத்தை எப்படியெல்லாம் இங்கே அரங்கேற்றினார்கள்? பொதுவாக ** திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பெஞ்சிலே ஏறி, சட்டமன்றப் பேரவைத் தலைவரை இழுத்து, கீழே இறக்கித் தள்ளி, டேபிளைத் தள்ளினர். அதுமட்டுமல்லாமல், 1921 ஆம் ஆண்டு லார்டு வில்லிங்டன் அவர்கள் கொடுத்த அந்தப் புனிதமான நாற்காலியில், மாண்பினை, மரபினை மீறி அமர்ந்து கொண்டதை,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை அன்றைக்கு ஏசினார்கள். இதுபோன்று எந்த ஓர் ஆட்சியிலும் இல்லாத வகையில், ஜனநாயகத்தை நிலைநாட்டுகின்ற இடமாக இருக்கின்ற இந்தச் சட்டமன்றப் பேரவையில், அந்த மரபை மீறி, அராஜகம், அட்டூழியம் மற்றும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே வந்து அந்த நாடகத்தை அரங்கேற்றினார்கள். ஆனால், நம்முடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், ஜனநாயக மாண்பு காப்பாற்றப்பட வேண்டும்; அம்மா அவர்கள் கற்றுக் கொடுத்த அந்த ஜனநாயகப் பண்புகளை, நெறிகளை நாம் பேணிக் காக்க வேண்டும் என்கிற ஒரே கொள்கையோடு, அமைதி காத்து, 'எத்தகைய இன்னல் தனக்கு வந்தாலும் சரி, அதை நான் ஏற்றுக்கொண்டு, முடிந்த அளவிற்கு ஜனநாயக மாண்பினைக் காப்பேன்' என்கின்ற வகையில், எல்லாவிதமான அராஜகங்களையும் அவர்கள் பொறுத்துக்கொண்டு, பெருந்தன்மையோடு சட்டமன்றப் பேரவையை அன்றைக்கு வழிநடத்தினார்கள். நான்கூட சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்தவன். நான் உடனேயே, சிறிது கோபப்படுகிற ஆள். நானாக இருந்தாலும் உடனடியாக நிச்சயமாக நடவடிக்கை எடுத்திருப்பேன். ஆனால், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அவசரம் காட்டாமல், பொறுமையாக இருந்து, அந்த ஜனநாயக மாண்பினைக் காப்பாற்றினார்கள்.

முற்பகல் 11-20

இன்றைக்கு சட்டசபையைப் புறக்கணித்துவிட்டு, வெளியே சென்று ஜனநாயகத்தைப் பற்றி யார் பேசுவது? 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாளன்று, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இதே அவையிலே, அன்றைக்கு துரியோதனன் சபையில் துச்சாதனன் எப்படி ஒரு பெண்ணான திரௌபதியை அவமானப்படுத்தினானோ, அதுபோல,—நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சேலையைப் பிடித்திழுத்து, அவர்களை அடித்து, அவமானப்படுத்தி, அசிங்கப்படுத்தி, வரலாற்றில் இடம்பெறக்கூடிய அளவிற்கு ஒரு சம்பவம் அரங்கேற்றப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், 2006 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. போஸ் அவர்கள் மற்றும் நாங்கள் எல்லோரும் அவையில் பேசுவதற்கு மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களிடம் அனுமதி கேட்டோம். "பேச அனுமதி கொடுக்க முடியாது" என்று சொன்னதனால், நாங்கள் குழுமியிருந்தபோது, அவைக் காவலரின் தொப்பி கீழே விழுகின்றது. அந்தத் தொப்பி கீழே விழுந்ததன் காரணமாக, அதை எடுத்துக் கொடுத்த திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் திரு. போஸ் அவர்களுக்கு, மூன்று மாத சம்பளம் இல்லை; சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உள்ள அவரின் அறையை அன்றிரவே காலி செய்யச் சொன்னார்கள். ஜனநாயகத்தை முழுமையான அளவிற்கு, குழிதோண்டிப் புதைத்து, சட்டமன்ற உறுப்பினருடைய மாண்புகள் முழுமையாக மறுக்கப்பட்டு, அவருக்கான உரிமைகளெல்லாம் மறுக்கப்பட்டன திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்.

ஆனால், இன்றைக்கு அதுபோன்ற நிலைமையா? அவர்கள் எந்தப் பொருள் குறித்துப் பேசுவதற்கும் எல்லாவிதமான வாய்ப்புகளையும் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் தருகிறீர்கள். அவர்கள் எந்தப் பிரச்சினையை எப்போது எழுப்பினாலும், அவை சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக இருந்தாலும்கூட, முழுமையான அளவிற்கு எதிர்க்கட்சிகளுக்கு எல்லா வாய்ப்புகளும் அளிக்க வேண்டும் என்பதற்காகவே, அந்த ஒரு தாராள மனப்பான்மையோடு நீங்கள் வாய்ப்பினை அளிக்கிறீர்கள். ஆனால், அதையெல்லாம் மறந்து, இன்றைக்கு அவர்கள் ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுவது வியப்பளிக்கிறது. நிச்சயமாக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் யாருமே இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தூங்குபவர்களை எழுப்பிவிடலாம், ஆனால், தூங்குபவர்போல் நடிப்பவர்களை நிச்சயமாக எழுப்ப முடியாது. எனவே, இதை உலக மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்த்தவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தக் கருத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையாற்றியபோது பயன்படுத்திய ** என்ற வார்த்தைகளை தயவு செய்து திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். பெரிய அளவிற்கு ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்கள் இங்கே வந்தார்கள். தமிழ்நாடே தலைகுனியக்கூடிய அளவிற்கு அந்தச் செயலை அரங்கேற்றினார்கள். மாண்புமிகு பேரவைத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவர் அவர்களை கீழே இழுத்துத் தள்ளி, அவருடைய table-ஐ எல்லாம் கீழே இழுத்துத் தள்ளி, எந்த அளவிற்கு இங்கே அலங்கோலம் செய்தார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். ஆனால், அவற்றையெல்லாம்கூட, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெருந்தன்மையோடு மன்னித்து, அவர்கள் திரும்ப அவைக்கு வந்து ஜனநாயக முறையில் பணிகளை ஆற்றவேண்டும் என்று அழைத்திருக்கிறார்கள். அதை அவர்கள் உணராதவர்களாக இருக்கிறார்கள். இதை நாட்டு மக்கள் நிச்சயமாக உணர்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தைகளை எடுத்துவிடலாம்.*

4. மானியக் கோரிக்கைகள், 2018-2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை } -தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.*

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,866,68,21,000/, மூலதனக் கணக்கில் ரூ.339,19,64,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.